## <u>அரசுத் தேர்வுகள்இயக்ககம், சென்னை – 600 006</u>

## <u>மேல்நிலை முதலாமாண்டு சிறப்பு துணைத் தேர்வு ஜூன்/ஜூலை 2019</u>
## <u>"சிறப்பு அனுமதி திட்டத்தின்" கீழ் (துட்கல்) தனித்தேர்வர்கள் விண்ணப்பித்தல்</u>

## <u>செய்திக் குறிப்பு</u>

நடைபெற்ற மார்ச் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் மற்றும் வருகை புரியாதவர்கள், நடைபெறவுள்ள ஜூன் 2019, மேல்நிலை முதலாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத இவ்வலுவலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குள் விண்ணப்பிக்க இயலாமல், தற்போது விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்களிடமிருந்து "சிறப்பு அனுமதி திட்டத்தின்" கீழ் (துட்கல்) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வினை எழுதிய தேர்வர்களுக்கு **10.05.2019** முதல் **14.05.2019** வரை பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியின் வாயிலாகவும், நேரடி தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

### <u>விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள்:</u>

"சிறப்பு அனுமதித் திட்டத்தின்" கீழ் தேர்வெழுத விரும்பும் தனித் தேர்வர்கள் தங்களது மாவட்டத்திற்குரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் **<u>16.05.2019 (வியாழக்கிழமை) மற்றும் 17.05.2019 ( வெள்ளிக்கிழமை)</u>** ஆகிய இரு நாட்களில் தங்களது விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ள வேண்டும். மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வெழுதியவர்கள் தமது மதிப்பெண் பட்டியலின் நகலினையும், தேர்விற்கு வருகை புரியாதவர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினையும், விண்ணப்பத்தினை பதிவு செய்யும் அலுவலரிடம் கண்டிப்பாக காண்பிக்க வேண்டும்.

### <u>செய்முறைத் தேர்வு உள்ள பாடங்களில் தேர்ச்சி பெறாதோருக்கான குறிப்பு</u> :

1. மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வின்போது செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அகமதிப்பீட்டில் மொத்தம் 35 மற்றும் அதற்கும் மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின்போது **<u>செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்றால் போதுமானது</u>**. அத்தேர்வர்கள் எழுத்துத் தேர்வினை மீண்டும் எழுத இயலாது.

2. செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அக மதிப்பீட்டில் மொத்தம் 35 மதிப்பெண்களுக்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின் போது எழுத்துத் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகிய இரண்டிலும் பங்கேற்க வேண்டும்.

3. செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், எழுத்துத் தேர்வினை மட்டும் எழுதினால் போதுமானது. அத்தேர்வர்கள் மீண்டும் செய்முறைத் தேர்வு செய்ய வேண்டியதில்லை.

...2...

**<u>தேர்வுக் கட்டணம்:</u>**

ஒரு பாடத்திற்கு ரூ.50/– + இதரக் கட்டணம் ரூ.35/–

இத்துடன் கூடுதலாக சிறப்பு அனுமதி கட்டணமாக ரூ.1000/– மற்றும் பதிவு கட்டணம் ரூ.50/– சேர்த்து உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் விநியோகம்</u>**

தேர்வுக் கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இணையதளத்தில் வெளியிடப்பட்ட அறிவுரைகளின்படி (தேர்வுக் கட்டண விவரம் தவிர்த்து) வயது வரம்பு, கல்வித் தகுதி மற்றும் பாடங்கள் வகைப்பாடு அறிந்து அதன்படி விண்ணப்பிக்க வேண்டும்.

தனித்தேர்வர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

**ஒம்./–**
**இயக்குநர்**

**நாள் : 15.05.2019**
**இடம்:** சென்னை – 6